2003 நவம்பர் 7] [பேரவைத் தலைவர்]

கல்விக் குழுவிற்கும் அவைகளுக்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள மாண்புமிகு உறுப்பினர்களிடமிருந்து முறையாக நியமனத் தாள்கள் வரப்பெற்றுள்ளன.

மதுரை காமராஜ் பல்கலைக்கழகம் ஆட்சிமன்றப் பேரவை : திருமதி வளர்மதி ஜெபராஜ்; திருவள்ளுவர் பல்கலைக்கழக கல்விக் குழு: திருமதி சி.எம். சூரியகலா, திரு. சி. ஞானசேகரன்;

தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கையும் முறையாக வரப்பெற்றுள்ள நியமனத் தாள்கள் எண்ணிக்கையும் சமமாக இருப்பதால் மேற்காணும் மாண்புமிகு உறுப்பினர்கள் அந்தப் பதவிகளுக்கு முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன்.

5. கவன ஈர்ப்பு

(அ) வால்பாறை தொகுதி, வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சி, பழைய சர்க்கார்பதி பகுதியில் பாலப் பணிகள் முடிவடையாதது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. கோவை தங்கம் அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. கோவை தங்கம். (குறுக்கீடுகள்)

முற்பகல் 11-10

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...(குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கோவை தங்கம். (குறுக்கீடுகள்) அனுமதி இல்லாமல் பேசக்கூடாது; பேசுவது அவைக் குறிப்பில் ஏறாது; தயவுசெய்து உட்காருங்கள். திரு. கோவை தங்கம்.

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை மாவட்டம், வால்பாறை தொகுதி, வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சியில் பழைய சர்க்கார்பதி மலைஜாதி மக்கள் குடியிருந்து வருகின்ற பகுதியில் பாலப் பணிகள் முடிவடையாதது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

(உறுப்பினர்கள் திரு. இரா. திருமாவளவன் அவர்களும், திரு. கு. ஜெயக்குமார் அவர்களும் எழுந்து நின்றுகொண்டு ஏதோ பேசிக்கொண்டே இருந்தனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அனுமதி இல்லாமல் பேசக்கூடாது. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.*

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.*

அறிக்கை

வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சிக்குட்பட்ட பழைய சர்க்கார்பதியில், வால்பாறை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ரூ. 10.00 இலட்சம் மதிப்பீட்டில் ஆற்றில் உயர்மட்டப் பாலம் தற்போது கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இந்தப் பாலத்தையொட்டி இரண்டு பக்கமும் தடுப்புச் சுவர்கள் கட்டி, இணைப்புச் சாலை அமைக்கும் பட்சத்தில் பழைய சர்க்கார்பதி, நாகர்ஊத்து மற்றும் மன்னம் பகுதிகளில் வசிக்கும் மலைவாழ் மக்கள், அவர்கள் வசிக்கும் பகுதியிலிருந்து சேத்துமடைக்கு வந்து செல்ல மிகவும் உதவியாக இருக்கும் என்பதால் இப்பணிக்கு ரூ. 7.00 இலட்சத்தில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டது.

ஆனால் இப்பேரூராட்சியில் போதிய நிதி வசதி இல்லாத காரணத்தால், கோவை மாவட்ட ஆட்சித் தலைவரால் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல நிதியிலிருந்து இந்த் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டு 31-10-2003 அன்று இப்பணியினை மேற்கொள்ள நிர்வாக அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது. இப்பணிகள் விரைவில் தொடங்கி, 31-12-2003-க்குள் நிறைவு செய்யப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. கோவை தங்கம். (குறுக்கீடுகள்) திரு. கோவை தங்கம், ஒரு கேள்வி கேளுங்கள். (குறுக்கீடுகள்) அவர்கள் பேசுவது எதுவும் அவைக்குறிப்பிலே ஏறாது. (குறுக்கீடுகள்) அனுமதி இல்லாமல் பேசக்கூடாது. (குறுக்கீடுகள்) திரு. கோவை தங்கம். (குறுக்கீடுகள்) கைநீட்டிப் பேசக்கூடாது. முறைகேடானது. தயவுசெய்து அமருங்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) கோவை தங்கம், ஒரு கேள்வி கேளுங்கள்.*

(சில திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்து, அவர்களுக்குப் பேச வாய்ப்பு கொடுக்குமாறு குரல் எழுப்பினர்.)

TRUTH ALONE TRIUMPHS

நான் அனுமதிக்க முடியாது. (குறுக்கீடுகள்) மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)

(உறுப்பினர் திரு. இரா. திருமாவளவன் அவர்கள் வெளிநடப்புச் செய்தார்.)

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறை சட்டமன்றத் தொகுதி, வேட்டைக்காரன்புதூர் பகுதி, சேத்துமடை அருகிலுள்ள பழைய சர்க்கார்பதி மலைஜாதி மக்கள் 250 குடும்பங்களில் உள்ள சுமார் ஆயிரம் பேர் வசித்து வருகிறார்கள். (குறுக்கீடு) இப்பகுதி மக்கள் கூலி வேலைக்கும், குழந்தைகள் பள்ளிகளுக்கும் செல்ல வேண்டுமானால், 6 கிலோ மீட்டர் தூரம் வனத் துறை வழியாகச் செல்ல வேண்டும். (குறுக்கீடு)

(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர் திரு. கு. ஜெயக்குமார், வெளிநடப்புச் செய்தார்.)

வனத் துறை வழியாகச் செல்லும்போது, எந்நேரமும் உயிருக்கு ஆபத்து ஏற்படும் நிலை ஏற்பட்டிருக்கிறது. சமீபத்தில்கூட, திரு. செந்தில் அவர்கள் தோட்டத்தை யானைகள் அழித்துவிட்டன; 5 இலட்சம் ரூபாய் நட்டம் ஏற்பட்டிருக்கிறது. பிரசவ நேரங்களிலே, பொதுமக்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். இப்போதுகூட இப்பகுதிக்கு அருகிலுள்ள டாணா முதல் தம்பதிமுடி வரை 5 கிலோ மீட்டர் சாலையும், சேத்துமடை முதல் தம்பதிமுடி சாலையும், டாணா முதல் சமாதானப்பதி சாலையும், மீனாட்சிபுரம் சாலையும், காளியம்மன் சாலையும் மிகவும் பழுதடைந்துள்ளன. இதையும் செப்பனிட்டு சீர்படுத்தித் தர வேண்டுகிறேன். மேலும் எனது சட்டமன்ற மேம்பாட்டு நிதியிலேயிருந்து 10 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து கொடுத்திருக்கிறேன். அரசு எனது கோரிக்கையை ஏற்று 7 இலட்சம் ரூபாய் பாலப் பணிக்காக அணுகு சாலைக்காக கொடுத்து உதவி செய்து, அந்தப் பகுதி மலைஜாதி மக்களின் நீண்டநாளைய கோரிக்கையை ஏற்று, உதவிபுரிந்த அரசுக்கும், ஆதிதிராவிட நலத் துறைக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) விதி 56-ன்கீழ் அனுமதிக்கப்பெற்று அவற்றிற்குச் சம்பந்தப்பட்ட அமைச்சர்களால் அளிக்கப்பட்ட விவர அறிக்கைகளுடன் அவைமுன் வைக்கப்பெற்றவை (1 முதல் 3 வரை இணைப்பாகச் சேர்க்கப்பட்டுள்ளன.*

---

*பக்கம் 232 முதல் 237 வரை இணைப்பாகச் சேர்க்கப்பட்டுள்ளன.